# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2020 யூலை

## (101) நிதிக் கணக்கீடு

---

### பகுதி A

**வினா இல. 01**

இவ்வினா **20** உப வினாக்களைக் கொண்டுள்ளது. இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட 4 தெரிவுகளிலிருந்து மிகச் சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களில், தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விடையளிக்குமாறு கேட்கப்பட்டது.

சொற்பளவான பரீட்சார்த்திகள் வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருக்க வில்லை. அவர்கள் விடைத்தாளில் MCQ இற்கான விடைகளை எழுதியிருந்தனர். அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்த சில பரீட்சார்த்திகள் வினாத்தாளிலேயே விடைகளைக் குறித்து அதனை விடைப் புத்தகத்துடன் இணைத்திருந்தனர். இதன் விளைவாக சில பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட வினாக்களுக்கு விடையளித்திருக்கவில்லை என்பதுடன் அங்கே எவ்வித இணைப்புத் தாள்களும் காணப்பட்டிருக்க வில்லை. இந்த உப வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளில் இனங்காணப்பட்ட பொதுவான பலவீனங்கள் / வழுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**வினா இல. 1.1**

இது ஒரு இலகுவான வினாவாக இருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாது விடை இல. (3) இனைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. (1) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.2**

சிலர் இல. (1) இற்குப் பதிலாக இல. (2) இனை விடையாக குறித்திருந்தனர். பரீட்சார்த்திகள் அடிப்படைத் தரப் பண்பியல்புகள் பற்றியும் கணக்கீட்டு உள்ளீடு மற்றும் வெளியீடு பற்றியும் அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வினா இல. 1.3**

கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிய போதுமான அறிவு காணப்படாததால், சிலர் இல. (1) ஐத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. (2) அல்லது (3) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.4**

போதுமான அறிவு காணப்படாததால், ஒரு சில பரீட்சார்த்திகள் இல. (4) ஐத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. (2) அல்லது (3) ஐத் தெரிவு செய்திருந்தனர். பரீட்சார்த்திகள் உரிமம் ஒன்றின் நாட்டதாரர்கள் பற்றிய அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் உள்ளக நாட்டதாரர்கள் மற்றும் வெளிவாரி நாட்டதாரர்கள் பற்றியும் அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வினா இல. 1.5**

பரீட்சார்த்திகள் உரிமம் ஒன்றின் ஊடுசெயல்கள் பற்றிய சரியான இரட்டைப் பதிவு பற்றிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும். சில பரீட்சார்த்திகள் காசுக் கணக்கு செலவுப் பதிவு செய்யப்பட வேண்டும் எனப் பிழையாக விளங்கிக் கொண்டிருந்தனர். அறிவு போதாமையால், சிலர் இல. (4) ஐத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. (1) அல்லது இல. (2) ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.6**

வினாவானது தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆண்டிற்கான இலாபத்தைக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலானவர்கள் சரியாக விடையளிக்கவில்லை. இதனால், அவர்கள் இல. (1) ஐத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. (3) அல்லது (4) ஐத் தெரிவு செய்திருந்தனர். பரீட்சார்த்திகள் + / - குறிகளில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**வினா இல. 1.7**

கணக்கீட்டுச் சமன்பாடு பற்றிய அறிவு சில பரீட்சார்த்திகளிடம் குறைவாகவே காணப்பட்டது. இது ஒரு கணக்கீட்டு அடிப்படையாகும். சிலர் இல. (4) ஐத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. (2) ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.8**

பரீட்சார்த்திகள் நிறுவனம் ஒன்றினால் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் பற்றிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும். விடையானது GRN ஆக இருந்த போதிலும், சிலர் இல. (2) இல் இருந்த PRN ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.9**

பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு சரியான விடையான இல. (2) ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.10**

சில பரீட்சார்த்திகளிடம் கணக்கீட்டுச் சமன்பாடு பற்றிய அறிவு பற்றாக்குறையாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் இல. (3) இற்குப் பதிலாக இல. (2) அல்லது (4) ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**1.11** தொடக்கம் **1.15** வரை தரப்பட்ட கூற்றுக்கள் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இனங்காணப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு:

**வினா இல. 1.11**

வரைவிலக்கணம் தொடர்பான அறிவு போதுமானதாக இல்லாததால் ‘சரியானது’ என எழுதுவதற்குப் பதிலாக சில பரீட்சார்த்திகள் ‘தவறானது’ என எழுதியிருந்தனர்.

**வினா இல. 1.12**

பொருண்மை எண்ணக்கரு பற்றிய போதிய அறிவின்மையால், ‘தவறானது’ என்பதற்குப் பதிலாக ‘சரியானது’ என விடை அளிக்கப்பட்டிருந்தது.

**வினா இல. 1.13**

பெரும்பாலானவர்கள் ‘சரியானது’ என சரியாக விடையளித்திருந்தனர்.

**வினா இல. 1.14**

பெரும்பாலானவர்கள் வினாவைப் பிழையாக விளங்கிக் கொண்டிருந்ததால் ‘சரியானது’ என்பதற்குப் பதிலாக ‘தவறானது’ எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா இல. 1.15**

பெரும்பாலானவர்கள் வங்கியானது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதாகக் கருதி ‘சரியானது’ என விடையளித்திருந்தனர். இது யார் வங்கிக் கணக்கிணக்கத்தைத் தயாரிக்கிறார்கள் என்பது பற்றிய அறிவு காணப்படாததையே காட்டுகிறது.

**1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்காகத் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பரீட்சார்த்திகள் விடையளித்தல் வேண்டும்.

இனங்காணப்பட்ட பொதுவான தவறுகள் பின்வருமாறு :

**வினா இல. 1.16**

இவ்வினா குறைந்துசெல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி ஆண்டிற்கான தேய்மானத்தைக் கணிப்பதை எதிர்பார்த்தது. 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானத்தைக் கணிக்குமாறு கேட்கப்பட்ட போதிலும் சிலர் 2 ஆம் ஆண்டிற்குப் பதிலாக 1 ஆம் ஆண்டிற்கான தேய்மானத்தைக் கணித்திருந்தனர். வேறு சிலர் வினாவைச் சரியாக வாசிக்காது திரள் தேய்மானத்தைக் கணித்திருந்தனர். மேலும் சில பரீட்சார்த்திகள் குறைந்து செல்லும் மீதி முறைக்குப் பதிலாக நேர் கோட்டு அடிப்படையில் கணிப்பிட்டிருந்தனர்.

**வினா இல. 1.17**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்கு நன்றாக விடையளிக்கவில்லை. இது மாறாமை எண்ணக்கரு பற்றிய அறிவு போதுமானதாக இல்லாமையைக் காட்டுகிறது.

**வினா இல. 1.18**

சில பரீட்சார்த்திகள் காசுக் கொள்வனவு, காசு விற்பனை, கடன் விற்பனை போன்ற தவறான விடைகளை அளித்திருந்தனர். அவர்களிடம் பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படும் ஊடுசெயல்கள் பற்றிய அறிவு போதியதாகக் காணப்படவில்லை.

**வினா இல. 1.19**

பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்திருந்தனர்.

**வினா இல. 1.20**

இவ்வினா தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2020 மார்ச் 31 இலான கடன்கொடுத்தோர் மீதியை கணிப்பிடுவதைப் பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகளிடம் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படுகின்ற ஊடுசெயல்கள் பற்றிய அறிவு குறைவாகவே காணப்பட்டது. விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தம்கூட சில பரீட்சார்த்திகளால் கணக்கில் பிழையாக உள்ளிடப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் ஊடுசெயல்களைப் பதியும்போது வரவு, செலவுப் பக்கங்களை மாறி மாறிப் பதிவு செய்திருந்தனர்.

<u>**பகுதி B**</u>

**வினா இல. 02**

இவ்வினா **(a), (b), (c)** என 3 பகுதிகளைக் கொண்டது. பகுதி **(a)** ஆனது வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தியது. **பகுதி (b)** ஆனது தொங்கற் கணக்கைத் தயாரிக்கும்படியும் **பகுதி (c)** ஆனது செம்மையாக்கப்பட்ட இலாபத்திற்கான கூற்றைத் தயாரிக்கும்படியும் கேட்டிருந்தது.

ஒட்டுமொத்தத்தில், அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** இற்கு விடை அளித்திருந்தனர் ஆயினும் குறிப்பிடத்தக்க அளவான பரீட்சார்த்திகள் **பகுதி (c)** இற்கு விடை அளித்திருக்கவில்லை.

எவ்வாறாயினும், விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் பலவீனங்களும் தவறுகளும் கண்டறியப்பட்டன:

**(a) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்தனர்.

(2) மீதித் தொகை ரூபா 85,500/- கணினிக் கணக்கிற்கு வரவுப்பதிவு செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், சில பரீட்சார்த்திகள் மொத்தச் செலவான ரூபா 95,000/- ஐயும் கணினிக் கணக்கிற்கு வரவுப்பதிவு செய்திருந்தனர். மேலும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தொங்கற் கணக்கின் பெயரை எழுதுவதற்குப் பதிலாக புள்ளிக் கோட்டினை இட்டிருந்தனர்.

(3) காசுக் கொள்வனவுத் தொகையான ரூபா 76,000/- காசேட்டில் சரியாக செலவுப்பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் காசேட்டில் செலவுப்பதிவு செய்வதற்குப் பதிலாக தொங்கற் கணக்கில் செலவுப்பதிவு செய்திருந்தனர்.

(4) சொற்பளவான பரீட்சார்த்திகள் தொங்கற் கணக்கில் வரவுப்பதிவு செய்வதற்குப் பதிலாக மோட்டார் வாகனக் கணக்கில் ரூபா 112,000/- வரவுப்பதிவு செய்திருந்தனர்.

(5) விற்பனை நாட்குறிப்பேட்டில் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்த தொகையை கடன்பட்டோர் கணக்கிற்கு வரவுவுப்பதிவு செய்வதற்குப் பதிலாக சில பரீட்சார்த்திகளால் தொங்கற் கணக்கிற்கு வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

**(b) தொங்கற் கணக்கின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியின் வித்தியாசத்தை தொங்கற் கணக்கின் ஆரம்ப மீதியாக எடுப்பதற்குப் பதிலாக இறுதி மீதியாக எடுத்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் தொங்கற் கணக்கின் ஆரம்ப வரவு மீதியை செலவு மீதியாக எடுத்திருந்ததுடன் வேறு சிலர் தொங்கற் கணக்கின் ஆரம்ப மீதியை பதிவு செய்திருக்க வில்லை.

(3) செலவுப் பதிவுகளை வரவுப் பக்கத்திலும் வரவுப் பதிவுகளைச் செலவுப் பக்கத்திலும் பதிவு செய்திருந்ததன் காரணமாக தொங்கற் கணக்கு சமப்படவில்லை.

**(c) செம்மையாக்கப்பட்ட இலாபக் கூற்று:**

(1) அதிகளவான பரீட்சார்த்திகளிடம் இலாப செம்மையாக்கல் கூற்றின் வடிவம் பற்றிய அறிவு காணப்படவில்லை.

(2) இலாபத்தைப் பாதிக்கின்ற வருமானம் மற்றும் செலவினங்களைத் துல்லியமாகக் கூட்டிக் கழிக்காததன் காரணமாக கணிக்கப்பட்ட இலாபம் பிழையானதாக இருந்தது.

## வினா இல. 03

இவ்வினா பேரேட்டுக் கணக்குகளில் உரிய இரட்டைப் பதிவுகளைப் பதிவு செய்ததன் பின்னரான பரீட்சை மீதியைத் தயாரிக்கின்ற பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானது.

எவ்வாறாயினும், பின்வரும் பலவீனங்கள் அடையாளங் காணப்பட்டன:

(1) சில பரீட்சார்த்திகள் காசு விற்பனைகள், கடன் விற்பனைகள், காசுக் கொள்வனவுகள் மற்றும் கடன் கொள்வனவுகளை தனித்தனி உருப்படிகளாக பரீட்சை மீதியில் காட்டியிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் ஆண்டிற்கான விற்பனையைக் கணிக்கும்போது காசு விற்பனைகளை மாத்திரம் கணக்கில் எடுத்திருந்ததுடன் ஆண்டிற்கான கொள்வனவுகள் சரியாகக் கணிப்பிடப்பட வில்லை.

(3) ஒரு சில பரீட்சார்த்திகள் வாடகைச் செலவுகள் மற்றும் முன்கூட்டியே செலுத்தப்பட்ட வாடகைச் செலவுகள் ஆகியவற்றை பரீட்சை மீதியில் தனித்தனியான ஊடுசெயல்களாகக் கருதுவதற்குப் பதிலாக மொத்தமாக அவை இரண்டினையும் கணக்கில் எடுத்திருந்தனர்.

(4) சில மாணவர்கள் காசாக இடப்பட்ட மூலதனம் மற்றும் மோட்டார் வாகனமாக முதலீடு செய்யப்பட்ட மூலதனம் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து எடுப்பதற்குப் பதிலாக இரண்டு தனித்தனி மூலதனக் கணக்குகளின் கீழ் எடுத்திருந்தனர்.

(5) ஒரு சில பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்டதற்குப் பொருத்தமான விடைகளை அளித்திருக்கவில்லை. உதாரணமாக, பரீட்சை மீதியைத் தயாரிக்குமாறு வினாவில் கேட்கப்பட்டது, ஆனால் பரீட்சார்த்திகள் பரீட்சை மீதிக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளை எழுதியிருந்தனர்.

(6) பேரேட்டு மீதிகளை பரீட்சை மீதிக்கு மாற்றும்போது, சில பரீட்சார்த்திகள் மீதிகளை பிழையாகக் கணக்கிலிட்டிருந்தனர். (வரவு மீதியொன்றுடன் முடிவடைகின்ற பேரேட்டுக் கணக்குகள் பரீட்சை மீதிக்கு செலவுப்பதிவு செய்யப்பட்டதுடன் செலவு மீதிகளுடன் முடிவடைந்த பேரேட்டுக் கணக்குகள் பரீட்சை மீதிக்கு வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தன.)

## வினா இல. 04

இவ்வினா உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

(1) புத்துருவாகும் வேலைகள் முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட வேண்டும் என வினாவில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் இதனை தொழிற்சாலைக் கிரயத்தின் கீழ் செம்மையாக்கம் செய்திருந்தனர்.

(2) சொற்பளவான பரீட்சார்த்திகளுக்கு தொழிற்சாலைக்கும் அலுவலகத்திற்கும் இடையில் சரியானவாறு செலவுகளை ஒதுக்கீடு செய்ய முடியவில்லை. சிலர் வேலையின் கீழ் சரியானவாறு ஒதுக்கீட்டைக் கணித்திருந்தனர் ஆயினும் தொழிற்சாலைக் கிரயத்தின் கீழ் கவனத்திற் கொள்ளவில்லை.

(3) தொழிற்சாலை மற்றும் அலுவலக ஒதுக்கீடுகள் பற்றிய குறைவான அறிவு காரணமாக, சில பரீட்சார்த்திகள் அலுவலகச் செலவினங்களையும்கூட தொழிற்சாலைச் செலவுகளின் கீழ் கவனத்திற் கொண்டிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் 20% இலாப எல்லையைக் கணிப்பிடாது மொத்த உற்பத்திக் கிரயம் வரை உற்பத்திக் கணக்கைப் பூரணப்படுத்தியுள்ளனர்.

(5) 20% இலாப எல்லையை துல்லியமாகக் கணிப்பிட்டு, உற்பத்திக் கிரயம் வரை உற்பத்திக் கணக்கைத் தயாரித்திருந்த சில பரீட்சார்த்திகள் உற்பத்திக் கிரயத்திற்கு 20% இலாப எல்லையைச் சேர்ப்பதன் மூலம் வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்பட வேண்டிய கிரயத்தைக் கணித்திருக்கவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் 20% இலாப எல்லையை மொத்த உற்பத்திக் கிரயத்துடன் சேர்ப்பதற்குப் பதிலாக அதனைக் மொத்த உற்பத்திக் கிரயத்திலிருந்து கழித்திருந்தனர்.

(7) மூலப்பொருள் மற்றும் புத்துருவாகும் வேலைகளின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் வெவ்வேறாகப் பிரித்துக் காட்டப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அவை ஒன்றாகச் சேர்த்துக் காட்டப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(8) சில பரீட்சார்த்திகள் கணக்குகளை முன்வைக்கும்போது சரியான வடிவம் பற்றிய அறிவு அவர்களிடம் காணப்பட்டிருக்கவில்லை.

(9) இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்றாக இருந்தது.

## வினா இல. 05

இவ்வினா கணக்கீட்டுச் சமன்பாடு, செம்மையாக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் வங்கிக் கணக்கிணக்கத்தின் தயாரிப்பு ஆகிய மூன்று பரப்புகளில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளைப் பெறக்கூடியதாகவும் இருந்தது.

**(A) கணக்கீட்டுச் சமன்பாடு:**

(1) தரப்பட்ட ஊடுசெயல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றிச் சில பரீட்சார்த்திகளுக்குத் தெரிந்திருக்கவில்லை. அதாவது சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் அதிகரிக்கும்போது அல்லது குறைவடையும்போது எவ்வாறு பதிவு செய்வது என்பது பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. சிலர் கூட்டல் (+) அல்லது கழித்தல் (-) அடையாளங்கள் இன்றி பதிவு செய்திருந்தனர்.

(2) சிலர் இரட்டைப் பதிவுகளைச் சரியாகக் காட்டியிருக்கவில்லை. இது கணக்கீட்டின் அடிப்படைகள் பற்றி போதிய அறிவின்மையைக் காட்டுகிறது.

(3) சிலர் ஒவ்வொரு ஊடுசெயலினதும் பணப் பெறுமதி இன்றி ''அதிகரிக்கிறது'' அல்லது ''குறைவடைகிறது'' என வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

(4) ரூபா 390,000/- கிரயமான இருப்பு கடனடிப்படையில் ரூபா 445,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டதை பதிவு செய்யும்போது அது பற்றிய போதிய அறிவு பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை.

**(B) பகுதி (a) செம்மையாக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு** மற்றும் **பகுதி (b) வங்கிக் கூற்று:**

(1) சில பரீட்சார்த்திகள் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதி ரூபா 155,000/- இனை பதிவு செய்திருக்கவில்லை.

(2) 20% ஆன பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்ட சகல ஊடுசெயல்களும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் அதேபோன்று வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கும் உரியன எனக் கவனத்திற் கொண்டிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் கணக்கீட்டு அறிவு இன்மையால் வரவு மற்றும் செலவுப் பதிவுகளை குழப்பி எழுதியிருந்தனர்.

(4) 10% ஆன பரீட்சார்த்திகள் செம்மையாக்கம் செய்யப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றிற்கான சரியான மீதியினைக் கவனத்திற் கொள்ளவில்லை.

(5) வங்கிக் கூற்றில் சில பரீட்சார்த்திகள் வைப்புச் செய்யப்பட்ட காசோலையைச் சேர்த்து, விநியோகிக்கப்பட்ட காசோலையைக் கழித்திருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06**

இவ்வினாவானது **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்ததுடன் இங்கு ஒரு தனியுடமை வியாபாரத்தின் இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பது பற்றிய அறிவு பரீசிக்கப் பட்டிருந்தது. **பகுதி (a)** இல் முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பது எதிர்பார்க்கப்பட்டதுடன் **பகுதி (b)** இல் நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பது எதிர்பார்க்கப்பட்டது.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு:**

(1) முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய போதிய அறிவின்மையால், சில பரீட்சார்த்திகள் காணி, கட்டடங்கள், மோட்டார் வாகனம் மற்றும் அலுவலக உபகரணங்கள் போன்ற நிதி நிலைக் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய உருப்படிகளை முற்றடக்க வருமானக் கூற்றில் பதிவு செய்திருந்தனர்.

(2) வங்கிக் கடன் வட்டி ஒரு செலவாக இருந்த போதிலும், சிலர் அதனை வேறு வருமானமாகக் கருதி, வருமானக் கூற்றில் பதிவு செய்திருந்தனர்.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் வங்கிக் கடன் வட்டியைச் சரியாகக் கணிப்பிடவில்லை. அவர்கள் கடன் வழங்கப்பட்ட திகதியை விளங்கிக்கொள்ளாது வருடாந்த வட்டியைக் கவனத்திற் கொண்டிருந்தனர்.

(4) ஐயக்கடன்களுக்கான 10% பொது ஏற்பாடானது அறவிடமுடியாக் கடன் ரூபா 850,000/- கழிக்கப்பட்ட பின்னர் வியாபார வருமதிகள் மீதியில் செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனை உதாசீனம் செய்து, வியாபார வருமதிகளின் மொத்தப் பெறுமதியின் மீது ஐயக்கடன் ஏற்பாட்டைச் செய்திருந்தனர். அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகளின் கீழ் உரிய தொகை சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் அட்டுறு மின்சாரம் மற்றும் நீர்ச் செலவுகளை சரியாக செம்மையாக்கம் செய்யவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் P & L இற்கு தாக்கல் செய்யப்பட்ட தேய்மானம் பற்றிய எவ்வித எண்ணவோட்டங்களையும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் வருமானக் கூற்றிற்கு திரள் தேய்மானத்தைப் உள்ளிட்டிருந்தனர்.

(7) சில பரீட்சார்த்திகள் செய்முறைகளை இணைத்திருக்கவில்லை.

(8) சில பரீட்சார்த்திகள் மொத்த இலாபத்தைப் பெறுவதற்கு விற்பனைக் கிரயத்தை விற்பனை வருமானத்துடன் சேர்த்திருந்தனர்.

(9) அதிகளவான பரீட்சார்த்திகள் தளபாடத் தேய்மானத்தைச் சரியாகக் கணித்திருக்க வில்லை. அவர்கள் தளபாடம் கொள்வனவு செய்யப்பட்ட திகதியைக் கருத்திற் கொள்ளாது வருடாந்த தேய்மானத்தைக் கருத்திற் கொண்டிருந்தனர்.

(10) சில பரீட்சார்த்திகள் கொள்வனவுகளிலிருந்து எடுப்பனவுகளைக் கழித்திருந்ததுடன் அவர்கள் இது தனியுடமை வியாபாரம் என்பதை மறந்திருந்தனர்.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

(1) நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய அடிப்படை விளக்கம் போதாத காரணத்தால் கொள்வனவுகள், விற்பனைகள், ஆரம்ப இருப்புகள் மற்றும் வேறு சில செலவுகள் என்பன நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(2) அட்டுறு மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் என்பன நிதி நிலைக் கூற்றில் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை.

(3) அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு என்பன சரியாகக் கணிப்பிடப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் அறவிடமுடியாக் கடன் பதிவழிப்புத் தொகையினை மாத்திரம் கழித்திருந்ததுடன் ஐயக்கடன் தொகைக்கான ஏற்பாட்டைத் தவிர்த்திருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் குறிப்பாக தளபாடத்திற்குரிய சரியான திரள் தேய்மானத் தொகையை குறிப்பிட்டிருக்கவில்லை.

(5) நிதி நிலைக் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்படவில்லை.

(6) பெரும்பாலான பரீட்சார்த்திகள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை பரிப்பாகக் கருத்திற் கொள்ளவில்லை. அவர்கள் நிலையான சொத்துக்கள் சேர்ப்பனவுகளைச் சரியாகச் சேர்த்திருந்தனர் ஆயினும் பரிப்பினைத் தவிர்த்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் இதனை உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனமாகக் கருதியிருந்தனர்.

(7) சில பரீட்சார்த்திகள் வங்கிக் கடன் தொகைக்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகையினைச் சேர்த்திருந்தனர்.

(8) சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றில் நடப்புச் சொத்துக்களாக இறுதித் தொக்கினைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக ஆரம்பத் தொக்கினைக் குறிப்பிட்டிருந்தனர்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும். புதிய பாட விடயங்கள்மீது கூடிய கவனம் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், நாட்குறிப்பேடுகளைப் படிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காண்பதுடன் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாக வெளிப்படுத்தவும்.

**(7)** அதிகளவான கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(8)** உங்களது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தவும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிக்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் முனைப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -